**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கூடலூர்**
**முன்னிலை – திரு. கு. சரவணகுமார், B.A., B.L., (Hon's)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்**
**2026–ம் ஆண்டு ஜீன் திங்கள் 24– ம் நாள் புதன்கிழமை**

**STC.No. 365/2025**
**CNR.No.TNNS070006762025**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | மாநில அரசு<br>காவல் உதவி ஆய்வாளர் மூலமாக<br>கூடலூர் காவல் நிலையம்<br>நீலகிரி மாவட்டம்.<br>குற்ற எண். 349/2024 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | – | 1. திரு. சக்திவேல், வயது 19/2025,<br>த/பெ. திரு. பழனிசாமி,<br>க.எண். 11/307, GC, முத்தமிழ் நகர்,<br>கூடலூர்.<br><br>2. திரு. ரியாஸ்<br>த/பெ. முகமது ரஃபீல்<br>கோத்தர்வயல், கூடலூர். |
| வனையப்பட்ட குற்றங்கள் | – | U/s 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 24.12.2024 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 24.12.2024 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | – | 24.12.2024 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | 24.12.2024 |

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.24 18:46:34 +0530

<table>
<tr><td>வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>–</td><td>09.06.2025</td></tr>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு.281–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>–</td><td>17.02.2026</td></tr>
<tr><td>சாட்சிகள் விசாரணை செய்த நாட்கள்</td><td>–</td><td>
<table>
<tr><td>சாட்சி வரிசை எண்.</td><td>முதல் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>10.06.2026</td><td>10.06.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>10.06.2026</td><td>10.06.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>குவிமுச.பிரிவு.311–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம்</td><td>–</td><td>கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் M.P.No. 4/2026என மனு தாக்கல் செய்யப்பட்டு 10.06.2026 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>குவிமுச.பிரிவு.313(1)(ஆ)– இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>–</td><td>22.06.2026</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விவரம்</td><td>–</td><td>இல்லை</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம்</td><td>–</td><td>இல்லை</td></tr>
<tr><td>தீர்மானம்</td><td>–</td><td>1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு. 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act– இன் கீழான குற்றங்களுக்கு குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டது.</td></tr>
</table>



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.24 18:46:38 +0530

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் குற்றம் புலன் கொள்ளப்பட்டு, 08.08.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையீட்டாளர் தரப்பில் காவல் ஆய்வாளர் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. ராபியா பீவி அவர்களும் முன்னிலையாகி இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து இறுதியாக 22.06.2026 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்ததில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

1) குற்றமுறையீட்டாளர் தரப்பில், கடந்த 24.12.2024 அன்று மாலை சுமார் 18.15 கூடலூர் பேருந்து நிலையம் அருகில் வைத்து 1ம் எதிரி தமிழக அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 25 கிராம் கஞ்சாவை 2ம் எதிரியிடமிருந்து வாங்கி விற்பனை செய்வதற்காக சட்டவிரோதமாக தன் வசம் வைத்திருந்த எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) மற்றும் 29(1) of NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் எனவும் கு.வி.மு.ச பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) குற்றம் புலன் கொள்ளல்:–**

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) மற்றும் 29(1) of NDPS Act 1985 –ன் கீழான குற்றங்கள்



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.24 18:46:42 +0530

இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 190(1)(b)–ன் கீழ் புலன் கொள்ளப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாக எதிரிகளுக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாக கு.வி.மு.ச. பிரிவு 204(1)(a)–ன் கீழ் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது.

**3) எதிரிகளுக்கு நகல் வழங்கல் மற்றும் முதல் நிலை விசாரணை:–**

அழைப்பாணையின் பேரில் 1, 2 எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானதும் எதிரிகளுக்கு வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச.பிரிவு.207–ன் கீழ் எவ்வித தாமதமுமின்றி இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு வழக்காவண நகல்கள் வழங்கப்பட்ட பின் போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு கு.வி.மு.ச. பிரிவு 281.ன் கீழ் வழக்கு சாராம்சங்கள் குறித்தும் விளக்கி வினவ கேட்டதில் எதிரிகள் குற்றவாளி இல்லையென மறுத்துரைத்தனர்.

**4) குற்றசாராம்சம் வனைதல்:–**

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்ததில் எதிரிகள் குற்றம் புரிந்ததற்கான போதிய முகாந்திரங்கள் உள்ளதாக தோன்றியதால் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) மற்றும் 29(1) of NDPS Act 1985-ன் கீழான குற்றங்களுக்கும் கு.வி.மு.ச. பிரிவு 252–ன் கீழ் குற்றசாரம்சம் வனையப்பட்டு எதிரிகள் மீதான குற்றசாரம்சங்கள் எதிரிகளுக்கு வாசித்து காண்பித்து விளக்கி வினவி கேட்கப்பட்டது.

Digitally signed by G.SARAVANAKUMAR
G.SARAVANAKUMAR
Date: 2026.06.24 18:46:47 +0530

**<u>5) எதிரிகளின் வாதம்:-</u>**

எதிரிகளிடம் மேற்கண்டபடி குற்றச்சாரம்சம் வனைந்து வினவி கேட்கப்பட்டதில் எதிரிகள் தாங்கள் **"குற்றவாளி இல்லை"** என தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை பொய் என மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டு அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் சார்வு செய்யப்பட்டன.

**<u>6). அரசு தரப்பு சாட்சியம்</u>**

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. பின்னிட்டு அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டன.

7) **<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சாரம்சம் பின்வருமாறு:-</u>**

7.1. அ.சா.1 – திரு. நிரூபன் சக்கரவர்த்தி, கூடலூர் காவல் நிலையத்தில் தற்போதைய காவலர் ஆவார்.

அ.சா.2 திரு. ராஜ்குமார், கூடலூர் காவல் நிலையத்தில் தற்போதைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஆவார்.

7.2. கடந்த 24.12.2024 அன்று உதவி ஆய்வாளர் குகனேஸ்வரன் தலைமையில் அ.சா.1 மற்றும் காவலர் மூவின் அவர்களும் கூடலூர் பேருந்து நிலையம் சென்று இரகசிய தகவலாளி அடையாளம் காட்ட அங்கு

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.24 18:46:52 +0530

ஒரு வித அச்சத்துடன் இருந்தவரை உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவர் தனது பெயர் சக்திவேல், த/பெ. பழனிசாமி என்று கூறியுள்ளார்.

7.3. உதவி ஆய்வாளர் எதிரியிடம் உங்களை அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி அல்லது நீதித்துறை நடுவர் முன்னிலையில் அழைத்து சென்று சோதனையிடலாமா என்று கேட்டபோது, அவர் நீங்களே சோதனையிடலாம் எனக் கூறி சோதனை செய்ய சோதனை விருப்ப கடிதம் தயார் செய்து எதிரியிடம் கையெழுத்து பெற்றுள்ளார்.

7.4. மேலும் உதவி ஆய்வாளர் எதிரியை சோதனை செய்த போது அவர் பேண்ட் பாக்கெட்டில் ஒரு பாலிதீன் கவரில் சுற்றி வைத்திருந்த ஒரு பொட்டலத்தில் 25 கிராம் கஞ்சா போதை பொருள் இருந்துள்ளது. உதவி ஆய்வாளர் இதுபற்றி கேட்டதற்கு குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் எதிரியை கைது செய்து எதிரியை விசாரித்தபோது எவ்வித அச்சுருத்தலோ, ஆசை வார்த்தைகளோ இன்றி ஒப்புதல் வாக்குமலும் அளித்துள்ளார். அதில் தான் கூடலூாரை சேர்ந்த ரியாஷ் என்பவரிடம் கஞ்சா எனும் போதை பொருளை வாங்கி அதை விற்பனை செய்து வந்ததாக வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

7.5. எதிரியிடம் இருந்த 25 கிராம் எடையுள்ள கஞ்சாவை கைப்பற்றுதல் மகஜர் மூலம் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துடன் காவல் நிலையம் வந்து குற்ற எண் 349/2024 என பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A), 29(1) of NDPS

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.24 18:46:56 +0530

Act.ன் கீழ் **அ.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். தொடர்ச்சியாக உதவி ஆய்வாளர் வழக்கு சொத்துக்களை **அ.சா.ஆ.4–** படிவம் – 91 மூலம் P.R.No. 1/2025என்ற எண் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார். பின்பு தடய சொத்தானது அ.சா.ஆ.5 மற்றும் 6 – படிவம் 4 மற்றும் படிவம் 6 மூலம் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது. தொடர்ச்சியாக உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது.

<u>8) எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு.313(1)(b)–ன் கீழ் வினவல்:–</u>

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1. மற்றும் அ.சா.2 சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகள் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் விளக்கி வினவிய போது அதனை எதிரிகள் மறுத்துரைத்துள்ளனர். எதிரிகள் தரப்பில் எவ்வித சாட்சியங்களும் சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. தொடர்ச்சியாக எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துவைக்கப்பட்டது.

9) இருதரப்பும் கேட்கப்பட்டது. சாட்சிகளும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டன.

<u>10) **தீர்வுக்குரிய பிரச்சினை:–**</u>

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது, 1, 2 எதிரிகள் மீதான 8(c) r/w 20(b)(ii)(A) மற்றும் 29(1) NDPS Act–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்**



G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.24 18:47:00 +0530

**மூலம் சந்தேத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

11. அரசு தரப்பில் முன்னிலையான காவல் ஆய்வாளர் தனது வாதத்தில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியங்கள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கு சட்டப்படியான அதிகபட்ச தண்டனை வழங்கிட வேண்டியும் வாதிட்டார்.

12. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் NDPS சிறப்பு சட்டத்தின் கீழ் சிறப்பு நீதிமன்றம் மட்டுமே அது சம்மந்தமான வழக்குகளை விசாரணை செய்ய ஆள்வரை உள்ளது என்றும் NDPS சட்டம் பிரிவு 50–ற்கான நடைமுறைகள் தக்க முறையில் பின்பற்றப்படவில்லை என்றும், போலீசார் தவிர்த்து வெளி நபர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட பொருளை துல்லியமாக அளவீடு செய்யவில்லை என்றும், மேற்படி வழக்கு சொத்தை எங்கு வைத்து யாரால் எவ்வாறு அளவீடு செய்யப்பட்டது என்று விளக்கப்படவில்லை என்றும், விசாரணை அதிகாரி வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

**<u>13. தீர்வு – 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act –ன் கீழான குற்றம்</u>**

13.1. கடந்த 24.12.2024 அன்று மாலை சுமார் 18.15 கூடலூர் பேருந்து நிலையம் அருகில் வைத்து 1ம் எதிரி தமிழக அரசால் தடை செய்யப்பட்ட சுமார் 25 கிராம் கஞ்சாவை 2ம் எதிரியிடமிருந்து வாங்கி விற்பனை செய்வதற்காக சட்டவிரோதமாக தன் வசம் வைத்திருந்த எதிரிகளின் செய்கைகளுக்காக சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) of NDPS Act 1985–ன் கீழ் குற்றசாரம்சம் வனையப்பட்டுள்ளது.

13.2. எதிரிகள் தரப்பு வழக்கானது, இவ்வழக்கு சிறப்பு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதை பொறுத்தவரை ***<u>Narcotic Drugs and Psychotropic Substances Act Section 36-</u>****A(a)*-ல் *“All offences under this Act which are punishable with imprisonment for a term of more than three years shall be triable only by the Special Court constituted for the area in which the offence has been committed or where there are more Special Courts than one for such area, by such one of them as may be specified in this behalf by the Government.“*என 3 ஆண்டுகளுக்கு மேற்படாத தண்டனை உள்ள குற்றங்களை தக்க ஆள்வரை நீதிமன்றம் விசாரிக்கத்தக்கது என கண்டுள்ளது. இவ்வழக்கில் எதிரிகள் மீதான 8(c) r/w 20(b)(ii)(A), 29(1) NDPS Act குற்றமானது ஒரு வருடங்கள் வரை நீட்டிக்கதக்க குற்றம் என்பதால் ஆள்வரை நீதிமன்றமான இந்நீதிமன்றத்திற்கு இவ்வழக்கை விசாரிக்க ஆள்வரை உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.24 18:47:08 +0530

13.3. மேலும் எதிரிகள் தரப்பில் பிரிவு. 50 NDPS Act–ன் கீழ் நபர்களை சோதனையிட நடுவர் அல்லது பதிவு பெற்ற அலுவலர் முன்னதாக சோதனை செய்ய வேண்டும் என்றும் எதிரிகள் தரப்பு வழக்கை பொறுத்தவரை பிரிவு. 50(5) NDPS Act ஆனது அத்தகைய நடுவர் அல்லது பதிவு பெற்ற அலுவலர் இல்லாதபட்சத்தில் கு.வி.மு.ச நடைமுறைகளை பின்பற்றி சோதனை செய்யலாம் என விதிவிலக்கு உட்பிரிவு வலியுறுத்துகிறது.

13.4. இந்த வழக்கில் அவ்வாறு கு.வி.மு.ச நடைமுறைகள் பின்பற்றப்பட்டு எதிரிகள் சோதனை செய்யப்பட்டு அவர்களிடமிருந்து தடய சொத்து கைப்பற்றப்பட்டதா என ஆராய்கையில், கு.வி.மு.ச பிரிவு 100 உட்பிரிவுகள் (4)(5)(7) மற்றும் (8) ஆகியவை ஒரு நபரை சோதனை செய்வது மற்றும் அவரிடமிருந்து கைப்பற்றுகை செய்வது சம்மந்தப்பட்டதாகும்.

Sec 100.of Crpc ***Persons in charge of closed place to allow search***.

*(1) . . . . . . .*

*(2) . . . . . . .*

*(3) . . . . . . .*

*(4)Before making a search under this Chapter, the officer or other person about to make it shall call upon two or more independent and respectable inhabitants of the locality in which the place to be searched is situate or of any other locality if no such inhabitant of the said locality is available or is willing to be a witness to the search, to attend and witness the search and may issue an order in writing to them or any of them so to do.*

*(5) The search shall be made in their presence, and a list of all things seized in the course of such search and of the places in which they are respectively found shall*



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.24 18:47:13 +0530

*be prepared by such officer or other person and signed by such witnesses; but no person witnessing a search under this section shall be required to attend the Court as a witness of the search unless specially summoned by it.*

*(6) . . . . . . .*

*(7)When any person is searched under sub-section (3), a list of all things taken possession of shall be prepared, and a copy thereof shall be delivered to such person.*

*(8) Any person who, without reasonable cause, refuses or neglects to attend and witness a search under this section, when called upon to do so by an order in writing delivered or tendered to him, shall be deemed to have committed an offence under section 187 of the Indian Penal Code (45 of 1860).*

13.5. மேற்கண்ட கு.வி.மு.ச பிரிவு 100 உட்பிரிவுகள் (4)(5)(7) மற்றும் (8) ஆகியவற்றை ஒருங்கே வாசிக்கையில் ஒரு நபரை சோதனையிடுவதற்கு முன்பு காவல் அலுவலர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிப்பட்ட சாட்சிகள் அல்லது அந்த அமைவிடத்தில் உள்ள மதிக்கத்தக்க குடியிருப்பு வாசிகள் ஆகியோர்களை அழைத்து அவர்கள் முன்னிலையில் சோதனை செய்து கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கு பட்டியல் தயார் செய்து அதில் மேற்கண்ட சாட்சிகளிடம் கையொப்பம் பெற வேண்டும் என்றும், அவ்வாறு தயாரிக்கப்பட்ட பட்டியலில் நகல் ஒன்றை எதிரிகளுக்கும் வழங்க வேண்டும் என்றும், அத்தகைய சாட்சிகள் சாட்சியாக முன்வர மறுக்கும்பட்சத்தில் அவர்கள் மீது இ.த.ச பிரிவு 187ன் கீழ் குற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

13.6. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையின்போது " பொதுவாக கஞ்சா வழக்குகளில் பொது சாட்சிகள் இருப்பதிலலை என்றால் சரிதான். யாரும் முன்வருவதில்லை" என்றும், அ.சா.2 தனது குறுக்கு



G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.24 18:47:18 +0530

விசாரணையின்போது எதிரிகள் மீது முன் வழக்குகள் இருப்பதால் அவர்கள் மீது பொதுஜன சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அதில் நான் பொய் சாட்சியமளிக்கிறன் என்றால் சரியல்ல என்று சாட்சியமளித்து சம்பவ இடத்தில் காவல் துறையினர் தவிர்த்து பொது ஜன சாட்சிகள் இருந்ததையும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

13.7. இந்த வழக்கில் அரசு தரப்பு வழக்கின்படி சம்பவ இடமானது பொதுமக்கள் அணுகக்கூடிய வகையில் அல்லாத இடமாக இருந்தது என்று அரசு தரப்பு வழக்கு அமையவில்லை. அத்தகைய சூழ்நிலையில் பொதுஜன சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யாமல் காவலர்களை சாட்சிகளாக வைத்து தடய சொத்தை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளது ஏற்புடையதன்று.

13.8. அரசு தரப்பு வழக்கின்படி பிரிவு 50ன் கீழான வழிமுறைகள் எதுவும் மீறப்படவில்லை என முன்னிறுத்தப்பட்ட வாதம் ஏற்கக்கூடியதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13.9. மேலும் பிரிவு 52(2) of NDPS Act ஆனது *Every person arrested and article seized under warrant issued under sub-section (1) of section 41 shall be forwarded without unnecessary delay to the Magistrate by whom the warrant was issued.* என தடய சொத்து கைப்பற்றப்படும் பட்சத்தில் அவை எவ்வித தாமதமும் இன்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறது. ஆனால், தடய சொத்தானது சம்பவ நாளான 24.12.2024



G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.24 18:47:23 +0530

அன்று கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பு வழக்கு உள்ளது. ஆனால், தடய சொத்துக்குரிய படிவம் – 91 இந்த நீதிமன்றத்திற்கு சுமார் 10 நாட்கள் கழித்து 03.01.2025 அன்று இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருப்பது அரசு தரப்பு வழக்கை சந்தேகமடையச் செய்கிறது.

13.10. அத்தகைய சூழ்நிலையில் எதிரிகள் சம்பவத்தின்போது குற்ற செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என அனுமானிப்பது நீதிக்கு உகந்ததாகாது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது

13.11. மேற்கண்ட விவாதங்கள் மற்றும் காரணங்கள் அடிப்படையில் 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(A) மற்றும் 29(1) குற்றத்தின் கீழ் குற்றவாளிகள் என தீர்மானிப்பது நீதிக்கு உகந்ததாக இருக்காது என இந்நீதிமன்றம் முடிவு காண்கின்றது.

**14. இறுதியாக,**

**(i) 1, 2 எதிரிகள் Sec.8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act–இன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளிகள் இல்லை என கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**(ii) இவ்வழக்கில் P.R.No. 1/2025–இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள 40 கிராம் தடய சொத்தானது ஏற்கனவே படிவம் –4, 5, 6 மூலம் பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டும், சேமிப்பு கிடங்கில் வைப்பதற்கும் உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, தடய சொத்துக்களையும் அதிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளையும் மாண்பமை Drug Disposal Committee, Coimbatore சமர்ப்பித்தல் வேண்டும் என்றும்,**

**மேல் முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்திரவிற்கேற்ப நடைமுறைபடுத்தப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் வருடம் ஜீன் மாதம் 24-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

G.SARAVANAKUMAR

Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.06.24 18:47:33 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>**

| **வ.எண்** | **சாட்சிகள் விபரம்** | **விளக்கம்** |
|---|---|---|
| அ.சா.1 | திரு. நிருபன் சக்கரவர்த்தி | கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| அ.சா.2 | திரு. ராஜ்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர். | புலன் விசாரணை சம்மந்தப்பட்ட சாட்சி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| **வ.எண்** | **சான்றாவண விபரம்** | **யார் மூலம் நிரூபிக்கப்பட்டது** |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | சோதனை விருப்ப கடிதம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | படிவம் – 91 | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | படிவம் –5 | அ.சா.2 |
| அ.சா.ஆ.6 | படிவம் – 6 | அ.சா.2 |

**எதிரி தரப்பு சாட்சி:**
இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள் :**
இல்லை

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:**
இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:**
இல்லை

**குறிப்புகள்:**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நிலைய பிணையில் இருந்தார்.
2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்குமேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.06.24 18:47:39 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

Visit **ecourts.gov.in** for updates or download mobile app "**eCourts Services**" from Android or iOS